# சித்ரமுத்து அடிகளாரின் குருமதிமாலை சுட்டும் நிலையாமை

# Impermanence Mentioned by Chitramuthu Adigalar in Kurumatimalai

முனைவர் இரா. சீதா லட்சுமி இராதாகிருஷ்ணன் / Dr. R. Seeta Lechumi Ratha Krishnan[1]
அருண் பாலன் / Arun Balan[2]

**Abstract**

Chitramuthu Adigal is one of the Siddhas who lived in the 20th century and he is known as 'Cittu Viḷaiyāṭāc Cittar'. He lived for 95 years and has published a book titled 'Aruloli' based on his experiences in the form of poetry. Although there are 18 works in this book, the main objective of this study is to reveal the impermanence found in the works of 'Kurumatimālai'. This study is based on library research. In this way, the messages mentioned by Chitramuthu Adigalar under the subtopics of impermanence of emotions, impermanence of wealth, impermanence of life and impermanence of body are analyzed here. In today's modern era, human lives in his life with a passion for many things, thinking that is permanent. But he did not realize the truth that they are all impermanent. Realizing this quality of human being, Chitramuthu Adigal has prioritized the concepts of impermanence in his poems. In this way, this research is intended to create awareness among the people by emphasizing the truths about impermanence mentioned by Chitramuthu Adigalar in Kurumatimālai.

Date of submission: 2023-12-14
Date of acceptance: 2023-12-26
Date of Publication: 2023-12-28
Corresponding author's Name:
Dr. R. Seeta Lechumi Ratha Krishnan
Email: arun.balan@moe.edu.my

**Keywords:** Chithramuttu Adigal, Aruloli, Kurumatimālai, Impermanence, Saints, Religious literature

## முன்னுரை

20 ஆம் நூற்றாண்டில் இப்புவியில் வாழ்ந்த சித்தர் பெருமக்களுள் சித்ரமுத்து அடிகள் குறிப்பிடத்தக்கவர். அடிகளாரின் சன்மார்க்க போதனைகள் அனைத்தும் தொகுக்கப்பெற்று 'அருளொளி' எனும் நூலாக வெளிவந்து மக்களை நல்வழிப்படுத்தின (தவயோகி தங்கராசன் அடிகளார், 2012, பக். 15). அருளொளி நூலில் இடம்பெற்றுள்ள குருமதிமாலை எனும் படைப்பில் நிலையாமை பற்றிய சிந்தனைகள் மேலோங்கிக் காணப்படுகின்றன. அவ்வகையில் குருமதிமாலையின் செய்யுள்களைத் துணையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. சித்ரமுத்து அடிகள் சுட்டும் நிலையாமைச் செய்திகளை மக்கள் அறிந்து தங்கள் அன்றாட வாழ்வில் அதனை முன்னிறுத்தி நிலையான பேரின்பத்தை அளிக்கக்கூடிய முக்தியை நோக்கி பயணித்தலை அடிப்படை

[1]The author is a senior lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rseeta@um.edu.my

[2]The author is a teacher at Sekolah Jenis Kebangsaan Tamil Ladang Gomali, Segamat, Johor, Malaysia. arun.balan@moe.edu.my

நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## ஆய்வுநெறி

இந்த ஆய்வுக்கட்டுரை நூலக ஆராய்ச்சி அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த ஆய்வின் முதன்மை நூலாக அருளொளியும் குருமதிமாலையும் இடம்பெறுகின்றன. நிலையாமை பற்றிய ஆய்வு நூல், கட்டுரை மற்றும் அதன் தொடர்புடைய பல நூல்களை ஆராய்ந்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## நிலையாமை

நிலையாமை மற்றும் மறுபிறப்பு என்பன இந்திய மண்ணில் உள்ள மதங்களின் தத்துவங்களுக்கு அடிப்படையாக உள்ளன. உலகில் எதுவும் நிலைப்பதில்லை; நிலைத்திருக்கும் என்று மனம் நினைப்பது மாயை. இந்த மாயை விலகிய உண்மை எல்லோர் மனத்திலும் உறைந்து விட்டால் எந்தச் சிக்கலும் அதனால் எழும் இன்னல்களும் இல்லை (அன்பழகன், 2003, பக்.72). நம் கண்ணில் பார்க்கக்கூடிய எல்லாப் பொருட்களும் ஒருநாள் அழிந்தே தீரும். கண்களுக்கு எது புலனாகவில்லையோ அதுவே அழியாப் பொருள். இந்த உலகில் எதுவும் நிலைத்திருக்கப் போவதில்லை. மாற்றம் ஒன்றுதான் நிலையானது. மாறிக் கொண்டே இருக்கும் என்ற விதி மட்டும் ஒரு போதும் மாறாது என நிலையாமைக்குச் சித்தர்கள் பொருள் கூறுகின்றனர் (யோகி கைலாஷ்நாத், 2005, பக்.215). நிலையாமை என்பது அழிக்கக்கூடியதும் மறையக்கூடியதுமான உலகப் பொருட்களை நிலையானது என்று நினைத்து வாழ்ந்த நிலையினை மாற்றி நீடித்த நிலைத்த ஆன்மாவின் வாழ்வினை அறிந்து கொண்டு வாழ்வதற்கான தத்துவமாகும் (கலாவதி, 2013, பக்.29). நிலையாமைத் தத்துவம் வாயிலாகத்தான் ஒருவனது அறிவு அறநெறியை நாடும் (மகாலட்சுமி, 2016, பக்.66). இதன்வழி, நிலையாமை ஒன்றே நிலையான உண்மை என அறிய முடிகின்றது.

சித்தர்கள் இளமை நிலையாமை, உடம்பில் உயிர் நிலையாமை, சேர்த்த செல்வம் நிலையாமை, நட்பு நிலையாமை, தார நிலையாமை, புத்திர நிலையாமை என்றும் நிலைக்காதவை மீது கொண்ட காதலும் நிலைக்காது என்று சொல்லியுள்ளார்கள் (யோகி கைலாஷ்நாத், 2005, பக்.215). ஒழுக்க நெறியைப் பின்பற்றுவதற்குக் காரணமாக முன்உணர வேண்டிய உலகப் பொருட்களின் நிலையாமையைத் திருமூலர் முதலாவது தந்திரத்தில் உரைத்துள்ளார். அவர் யாக்கை, செல்வம், இளமை, உயிர் ஆகிய நான்கு வகையான நிலையாமைகள் குறித்துத் திருமந்திரத்தில் சுட்டியுள்ளார். யாக்கை நிலையாமைக்கு 25 பாடல்கள் (திருமந்திரம் 187 211), செல்வ நிலையாமைக்கு 9 பாடல்கள் (திருமந்திரம் 212 220), இளமை நிலையாமைக்கு 8 பாடல்கள் (திருமந்திரம் 221 228), உயிர் நிலையாமைக்கு 10 பாடல்கள் (திருமந்திரம் 229 238) என நிலையாமைக்கென 54 பாடல்களைப் பாடியுள்ளார் (இராமநாத பிள்ளை - சிதம்பரனார், 1957, பக்.81123). திருக்குறள் ‘நிலையாமை’ என்ற தலைப்பில் பத்து குறட்பாக்களைக் கூறுகின்றது. சித்ரமுத்து அடிகளாரின் நிலையாமை தொடர்பான கருத்துகள் ‘யாக்கை நிலையாமை’, ‘செல்வம் நிலையாமை’, ‘உயிர் நிலையாமை’ மற்றும் ‘சிற்றின்பம் நிலையாமை’ எனும் சிறு தலைப்புகளில் இவ்விடம் ஆய்ந்தறியப்படுகின்றன.

## யாக்கை நிலையாமை

‘யாக்கை’ எனப்படுவது உடலைக் குறிக்கும். உடலில் உயிர் உள்ளவரை ஒருவர் எந்தச் செயலை வேண்டுமானாலும் செய்ய முடியும். உயிர் பிரிந்துவிட்டால் எதுவுமில்லை. எப்போது மரணம் அழைக்கும் என்று யாருக்கும் தெரியாது. இந்த உடலானது கோழை மிகுந்து, ஊழ்வினை மூட்டு அறுந்துவிடுகின்றது; மூச்சு அற்றுபோகின்றது. உடலில் செயல்பட்ட 96 தத்துவங்களும் செயல் இழக்கின்றன. கோயில் போன்று நிலையாக நின்ற யாக்கையிலிருந்து அவை வெளியேறுகின்றன. உடம்பின் கட்டமைப்புக்குக் காரணமான ஐம்புலன்கள், மூலமாகிய ஆறு ஆதாரங்கள், 30 எலும்புகள், இவைகளைப் போர்த்தி வைத்துள்ள பந்தலாகிய உடம்பு நிலையாமையால் அழிகின்றது (அன்பழகன்,

*2003, பக்.73).* சித்ரமுத்து அடிகளும் யாக்கை நிலையாமையைப் பற்றி மூன்று செய்யுள்களை இயற்றியுள்ளார். கண்ணால் காணக்கூடிய சடப்பொருள்கள் அனைத்தும் மாயமாய் மறைவதுபோன்று, மனித உடலும் அழிந்து ஒழியும். அதற்கு முன், அருளுலகை அடைவதற்கான வழியை அறிந்து, அற்ப உலக ஆசையைக் கடந்து, கடைத்தேறி, இறைவனை சிதாகாயத்தின் உள்ளே அக்கண்ணால் கண்டு உணர்வுறக் கூடிக்கொள்ளல் மிகவும் நலமே என்பதனை,

*மாண்டு மண்ணாய்ப் போவதற்குள்*

*ஆண்டவனருளொளியைக்*

*கூண்டினுள்குலாவு நீயையா பவக்கடலைத்*

*தாண்டிமேலே போகலாமையா.*

(குருமதிமாலை: 19)

எனும் பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றன. உடல் அழிவதற்குள் அதனுள்ளே குடிகொண்டிருக்கும் உயிரை இறைவனோடு இரண்டறக் கலப்பதற்கான வழியைக் கண்டறிந்து செயல்படுத்த வேண்டும் என்பதனைச் சித்ரமுத்து அடிகள் குறிப்பிடுகின்றார். மேலும் அவர், மனிதர்கள் தங்களது உடல் ஒருநாள் அழியப்போகின்றது எனும் உண்மையை உணரவில்லை எனப் பின்வருமாறு உரைக்கின்றார்.

*எத்தனை வயதிருந்துஞ்*

*செத்திருவோமென்றுனது*

*பித்தின்னுந் தெளியவில்லையே எமதருமை*

*உத்தமா நீயின்னுங் கேளையா.*

(குருமதிமாலை: 27)

இப்பாடலின்வழி, இப்புவியில் பல ஆண்டுகள் வாழ்ந்தாலும்கூட ஏதாவது ஒருநாள் உடல் அழிந்து போகும் உண்மையைப் பலர் இன்னும் அறிந்திருக்கவில்லை என அறிய முடிகின்றது. இம்மாயா விநோத உலகில் மனிதர்களைப் பீடித்திருக்கும் பற்றினால் இச்சந்தேகம் தெளியவில்லை எனவும் சித்ரமுத்து அடிகளார் கூறுகின்றார். ஆகவே, மனிதர்கள் அடிகளாரின் உபதேசத்திற்கேற்ப அதன்வழி நின்று இந்த அறியாமையைப் போக்கிக் கொள்ள வேண்டும் என அவர் அறைகூவல் விடுக்கின்றார். இதனைத் தவிர்த்து, அழிந்துபோகக்கூடிய உடலுக்கு அலங்காரம் தேவையில்லை எனும் கருத்தினை,

*ஆடையுமத்தர் பன்னீரு*

*வாடையுமணிந்துபல*

*சாடைபேச வேண்டாமையனே உடல்சுமக்கும்*

*பாடையொன்றிருக்குதையனே.*

(குருமதிமாலை: 28)

எனும் செய்யுள்வரிகள் மெய்ப்பிக்கின்றன. விலையுயர்ந்த ஆடைகளை உடுத்துதல், வாசனைத் திரவியங்களை அணிந்து கொள்ளுதல் போன்றவை வீணான செயல் என உணர்ந்து அவற்றைத் தவிர்க்க வேண்டும். இவ்வாறு செய்தாலும்கூட, உயிர் பிரிந்த பின்னர் உடலைப் பாடையில் இட்டு இடுகாட்டுக்குக் கொண்டு சென்று விடுவர். அதனால், ஆடம்பரமின்றி நடுநிலையாக வாழ்க்கை நடத்துதல் நன்மை பயக்கும் என மக்களுக்கு அடிகளார் அறிவுரை கூறுகின்றார்.

ஆக, சடப்பொருளாகிய உடல் அழியும், உடல் அழியக்கூடியது என்பதை உணர்தல், உடலுக்கு அலங்காரம் தேவையில்லை ஆகிய கருத்துகளைச் சித்ரமுத்து அடிகள் யாக்கை நிலையாமையை விளக்குவதற்காக எடுத்துரைத்துள்ளார். இதனை மக்கள் உணர்ந்து, உடல் நிலையற்றது என்பதனை அறிந்து உயிர் உடலில் இருக்கும்போதே இறைவனை அடைவதற்கு முயல வேண்டும் என்பதே அடிகளாரின் எதிர்ப்பார்ப்பாக இருந்துள்ளது.

## செல்வம் நிலையாமை

'செல்வம்' என்பதற்கு இன்பம், அழகு, பொருள், சீர், சுவர்க்கம், கல்வி, செழிப்பு எனத் தமிழ் இலக்கிய அகராதி பொருள் தருகின்றது (தமிழ் இலக்கிய அகராதி, *1957, பக்.192).* இத்தலைப்பிற்கு 'பொருள்' எனும் அர்த்தமே மிகப் பொருந்தும். இவ்வுலகியப் பொருள்களும் நிலையானவை அல்ல.

சிறுமணல் துளி முதல் பெருங்கோள்கள் வரை உள்ள இயற்கைப் பொருள்களும் மனிதனால் உருவாக்கப்பட்ட செயற்கைப் பொருள்களும் என்றேனும் ஒருநாள் அழிந்துபோகும். ‘நில்லா இயல்புடையது செல்வம்’ எனக் கூறுகின்றார் திருவள்ளுவர். தான் சேர்த்து வைத்த செல்வம் என்றும் தன்னிடமே இருக்க வேண்டும் என விரும்புகின்றான் மனிதன். ஆசையோடு சேர்த்து வைத்த செல்வம் என்றைக்கு அழிந்துவிடுமோ, தன்னைவிட்டு அகன்றுவிடுமோ என அஞ்சுகின்றான். இதுவே மனிதனை வருந்தச் செய்கின்றது (நாராயணன், 1990, பக்.60). செல்வம் நிலையாமையைப் பற்றி சித்ரமுத்து அடிகள் இரு செய்யுள்களின் வழியாகப் பின்வருமாறு விவரிக்கின்றார்.

*காசு காசுவென்பதாலுன்*

*மாசுமறுவற்றவுள்ளம்*

*தூசுபடிந்தாகி விட்டதே அதனாலுனக்கு*

*ஈசுரகிருபையற்றதே.*

(குருமதிமாலை: 29)

இப்புவியில் பேராசையின் காரணமாக மனிதர்களுக்குப் பணத்தின் மீது அதீத மோகம் ஏற்பட்டு அவர்களது உள்ளம் கறை படிந்துள்ளது. இதனால், இறைவனின் திருவருளால் உணரக்கூடிய பேரொளியின் பிரகாசம் குறைந்து நாளடைவில் மறைந்தும் போய்விட்டது. ஆகவே, செல்வத்தின் மீதுள்ள பற்றுகளை விட்டு இறைவனது திருவருளைப் பெறுவதற்கு அருந்தவம் புரிய வேண்டும் எனச் சித்ரமுத்து அடிகள் அனைவரையும் அழைக்கின்றார். இதன்வழி, செல்வம் நிலையில்லாதது என அறிந்து அதன் மீதுள்ள விருப்பத்தை விட்டால் மட்டுமே இறைவனது அருள் பரிபூரணமாகக் கிட்டும் என்பது உறுதியாகின்றது.

மேலும், அவர் மனிதர்களின் ஆடம்பர வாழ்க்கையும் நிலையில்லாதது எனப் பின்வருமாறு விவரிக்கின்றார்.

*கடுக்கனோடு மோதிர*

*முடுக்கநல்ல சோமனும்*

*படுத்துறங்கும் பஞ்சணையுமே அதுமட்டுமா*

*அடுக்குமாளிகையும் மாயுமே*

(குருமதிமாலை: 30)

காதில் வைரக்கடுக்கண், விரல்களில் மோதிரங்கள் அணிதல், இடுப்பு அணிகலன்கள், தூங்குவதற்காக வசதிமிகுந்த கட்டில், மெத்தை, மாளிகை போன்ற வீடு ஆகியவை ஆடம்பர வாழ்க்கையாகக் கருதப்படுகின்றது. நிலையில்லாத இம்மாதிரியான செல்வங்கள் யாவும் ஒருநாள் அழிந்து ஒழியும் என்பதனை மாந்தர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் எனச் சித்ரமுத்து அடிகள் அறிவுரை கூறுகின்றார்.

ஒரு மனிதன் மலை போன்று செல்வம் வைத்திருப்பினும் அவன் இறந்தபிறகு அதனைக் கையோடு எடுத்துச் செல்ல முடியாது. ஆகவே, நிலையில்லாத செல்வத்தை வீணே குவிக்காமல், அதனைத் தேவைக்கேற்பத் தேடி, வாழ்க்கையில் பயன்படுத்தி எளிமையான வாழ்க்கையை வாழ வேண்டும். அந்தச் செல்வத்தைத் தேவைப்படுபவர்களுக்குத் தந்து உதவிட வேண்டும். இதன்வழி, அனைவரும் சிறப்பான வாழ்க்கையை வாழ முடியும் என்பது கண்கூடு.

## உயிர் நிலையாமை

‘உயிர்’ என்பதற்கு ஆன்மாவின் ஒற்றுமைப்பட்டு கால முடிவு வரையினின்று காலத்தின் இறுதியில் பூததேகம் நீங்கிச் சூக்கும சரீரத்துடன் ஆன்மாவைப் பின்பற்றிச் செல்லும் அருவுருவப் பொருள் என அபிதான சிந்தாமணியில் குறிப்பிடப்பட்டுள்ளது (சிங்காரவேலு முதலியார், 2002, பக்.247). உயிர் நிலையாமை மனித மனத்தில் இறப்பச்சத்தை ஏற்படுத்துகின்றது. இந்த இறப்பச்சமே மத உணர்வுக்கும் கடவுள் நம்பிக்கைக்கும் முதற்காரணமாகின்றது. மூப்பும் இறப்பும் இன்றி வாழ முடியும் என்ற உறுதி ஏற்பட்டுவிட்டால் உலகியலுக்கு அப்பாற்பட்ட கடவுளையோ மதத்தையோ மனிதன் நாடமாட்டான். அறிவியல் தத்துவ ஆய்வுகளும் பல கோடி ஆண்டுகளாக நிகழும் வரலாற்றுச் சான்றுகளும் மரணமென்பது தவிர்க்க முடியாத முடிவென்பதைக் காட்டி உயிர் வாழ்க்கையின் நிலையாமையை

உறுதிப்படுத்துகின்றன. நின்றதை இயக்கவும் இயங்குவதை நிறுத்தவும் மனிதனின் அறிவியலறிவு துணை செய்கின்றது. ஆனால், மரணத்தைத் தடுக்கவோ மாண்டதை மீட்கவோ மனிதனால் முடியவில்லை (நாராயணன், 1990, பக்.58 59). ஆக, உயிர் நிலையாமை இங்குத் தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனையே, சித்ரமுத்து அடிகளாரும் தமது செய்யுள்வழியாக மக்களுக்கு விளக்குகின்றார்.

மனிதர்கள் உயிர் நிலையாமையைப் பற்றி அறிந்து கொண்டு அதன் தொடர்பாக பேரறிவால் ஆன்மசிந்தனையில் ஈடுபட வேண்டும் என்பதனை,

*மாநிலத்திலே மனிதன்*

*ஏனினிபிறந்திருந்தும்*

*வீணிலேயிறந்து போகணும் எனச்சதாவும்*

*பேணியுன்னை நீயுணரணும்*

(குருமதிமாலை: 18)

எனும் செய்யுள் வழியாகச் சித்ரமுத்து அடிகளார் உணர்த்துகின்றார். மனிதப் பிறவியே மற்ற எல்லாப் பிறவிகளை விடவும் சிறந்தது என எண்ணி நிலையில்லாத வாழ்க்கையை வாழ்ந்து, சிறிது பயனடைந்து, பின் ஏன் மடிந்து போக வேண்டும் என்பதனைப் பற்றி மாந்தர்கள் சிந்திக்க வேண்டும் என அடிகள் கூறுகின்றார். இதன்வழி, உயிர் நிலையாமையை அறிந்து முக்தி எனும் பேரின்பத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும் எனும் கருத்து இங்குச் புதைநிலையாகச் சுட்டப்படுகின்றது.

இதைத் தவிர்த்து, உயிர் உடலை விட்டுப்போகும் முன் இறைவன் திருவடியைச் சென்று சேர வேண்டும் என்பதனைப் பின்வருமாறு அடிகள் உரைக்கின்றார்.

*பாழுமா படுகுழியில்*

*வீழுமுன்னமே பகவான்*

*றாளினைப் பிடித்துக் கொள்ளையா அழைபிற்சிறு*

*நாழிகைக்குளேகலாமையா.*

(குருமதிமாலை: 22)

மனிதர்கள் பாசமாகிய பாழான படுகுழி எனக் கருதப்படும் உலக வாழ்க்கையில் ஈடுபட்டு, துன்பங்களை அனுபவிக்கக்கூடும். அந்தத் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு, எங்கும் வியாபித்திருக்கின்ற இறைவனது திருவடியைப் பற்றிக் கொள்ள வேண்டும் எனச் சித்ரமுத்து அடிகள் வேண்டுகோள் விடுக்கின்றார். இதன் மூலம், இறைவன் மனிதனின் அன்பினை அறிந்து அவரது திருவருளால் நொடிப்பொழுதில் முக்தியின்பத்தைத் துய்க்கலாம் என்பது உண்மை என அடிகள் தெளிவுபடுத்துகின்றார்.

ஆக, மானிடப் பிறவியின் மூலமாக முக்தி எனும் பேரின்பத்தை எய்த முடியும். ஒருவரின் உயிர் உடலில் இருக்கும்போதே அதனை அடைய முற்பட வேண்டும். உடலிலிருந்து உயிர் பிரிந்தால் எதற்கும் பயனளிக்காமல் போய்விடும். மானிடப் பிறவியின் அவசியத்தை உணர்ந்து செயல்பட்டால், இறைவன் திருவருளால் இறவா நிலை கிட்டுவது உறுதி.

### சிற்றின்பம் நிலையாமை

'சிற்றின்பம்' எனப்படுவது இலௌகீக இன்பத்தினைக் குறிக்கின்றது என நவீனத் தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது (கிருஷ்ணசாமிப்பிள்ளை, 1935, பக்.233). 'இலௌகீகம்' உலகச் சம்பந்தமானது எனத் தமிழ் இலக்கிய அகராதி பொருள் பகர்கின்றது (வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், 1957, பக்.50). இதன்வழி, 'சிற்றின்பம்' என்பது உலகச் சம்பந்தமான இன்பங்களைக் குறிக்கின்றது எனப் பொதுவாகக் கூறலாம். இவ்வின்பங்களுள் முதலிடம் பெறுவது பெண்ணால் கிடைக்கப்பெறும் இன்பமே ஆகும். 'பெண்ணாசை விலக்கம்' என்ற தலைப்பில் சித்தர்கள் பழித்துப் பேசுவது முறை பிறழ்ந்த, ஒழுக்கம் கெட்ட பால் உறவைத்தானே தவிர வேறு இல்லை. ஒழுக்கத்தோடு கூடிய முறையான கணவன் மனைவி இடையே உள்ள புனித உறவைச் சித்தர்கள் பழித்தது இல்லை. அவர்கள் விபச்சாரம் செய்யும் ஆண், பெண்களை வன்மையாகக் கண்டிக்கின்றார்கள்; இல்லறத்தைப் போற்றுகின்றார்கள் (யோகி கைலாஷ்நாத், 2005, பக்.214). சித்தர்களைப்

போலவே சித்ரமுத்து அடிகளும் இக்காம இன்பமானது நிலையற்றது எனத் தமது பாடல்களில் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகியல் வாழ்க்கையில், குழந்தைகள், மனைவி, உறவு, தனம், தான்யம் ஆகியவற்றால் பெறப்படும் இன்பங்கள் அனைத்தும் நிலையற்றவை என்பதனை,

*பெண்டுபிள்ளை சுற்றமெனக்*

*கண்டுநீ களிப்பதெல்லாம்*

*நின்றுனை நிலைநிறுத்துமா நமனெறியுங்*

*குண்டுதான் விலகிப் போகுமா*

*(குருமதிமாலை: 25)*

எனும் பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றன. இவற்றால் பெறக்கூடிய இன்பங்கள் அனைத்தும் எமன் பாசக்கயிற்றை வீசும்பொழுது எதுவும் துணைபுரியாது. ஆகவே, நிலையில்லாத இந்தச் சிற்றின்பத்தை விடுத்து நிலையான பேரின்பத்தை நாட வேண்டும் எனச் சித்ரமுத்து அடிகள் வேண்டுகின்றார்.

இதைத் தவிர்த்து, தேசிகள்மீது கொண்டுள்ள ஆசையினால் பெறப்படும் இன்பமும் சிற்றின்பமே எனும் கருத்தினைப் பின்வரும் செய்யுள் வரிகள் விளக்குகின்றன.

*தேசிகன்மீதாசை யற்று*

*தாசிகள்மே லிச்சையுற்று*

*காசினியெலா மலைவதேன் இறையருளின்*

*ஆசியை மறந்தழிவதேன்*

*(குருமதிமாலை: 43)*

தற்கால மனிதர்கள் இறைவன் திருவருளால் கிடைக்கக்கூடிய பேரின்பத்தின்மீது ஆர்வம் காட்டாமல், விலைமகள் மீதுள்ள ஆசையினால் பெறப்படும் சிற்றின்பத்தின்மேல் விருப்பம் கொண்டுள்ளனர். நிலையில்லாத அற்ப இன்பத்திற்காக விலைமகளுடன் கூடி மதியிழந்து அலைந்து பலரும் 'சண்டாளன்' என இகழும்படியாக வாழ நேரிடுகின்றது. நிலையில்லாத இந்த இன்பத்தைத் தவிர்த்து உலகெல்லாம் சுற்றி அவமே கெட்டு அழிந்து போகாதும், சரியான நேரத்தில் கடவுளின் அருளைப் பெற்று ஆனந்தமுடன் இருக்க வேண்டும் எனச் சித்ரமுத்து அடிகள் எதிர்ப்பார்க்கின்றார்.

மேலும், தன் மனைவியைத் தவிர்த்து மற்ற பெண்களைக் காணுதல் பேராபத்தை உண்டாக்கிவிடும் என்பதனைப் பின்வரும் செய்யுள் வரிகள் உணர்த்துகின்றன.

*பெண்களைக் கண்டாற்கொடிய*

*கண்களை யடக்கிடாதுன்*

*எண்ணிலாத் தவம்நிலைக்குமா உயர்கதியை*

*நண்ணிடவருள் சுரக்குமா*

*(குருமதிமாலை: 44)*

மனிதர்களுள் சிலர் நஞ்சாகப் பாவிக்கப்படும் விலைமாதர்களுடன் கொண்ட நட்பானது அமுதுபோல் இனிக்கும் என்றெண்ணி கண்ணால் கண்டு கெடுகின்றனர். இதனால், அவர்கள் மேற்கொண்ட அரிய தவம் பயனற்றுப்போய் மோட்சவீட்டின் கதவும் மூடிக்கொள்ளும் எனச் சித்ரமுத்து அடிகள் எச்சரிக்கின்றார். ஆகவே, இந்த உண்மையை உணர்ந்து விலைமாதர்களின் மூலம் பெறப்படும் சிற்றின்பத்தை விலக்கி, பேரின்பத்தை நோக்கி மனத்தைச் செலுத்துதல் நலம் பயக்கும்.

அதோடுமட்டுமல்லாமல், விலை மாதுகளின் வழி கிடைக்கும் சிற்றின்பத்திற் காகச் சேமித்த பணத்தையெல்லாம் செலவழித்து பல நோய்கள் பீடித்து அல்லல்படுதல் தகுமா என,

*வேசையர்கள் மீதிலேவீ*

*ணாசைகள் வைத்தேயுழன்றுன்*

*காசையுமழித்தல் தகுமா சதா*

*நீ செய்யும் பூசையை மறக்கலாகுமா*

*(குருமதிமாலை: 45)*

எனும் செய்யுளின் மூலம் தமது கேள்விக்கணைகளைச் சித்ரமுத்து அடிகள் தொடுக்கின்றார். நிலையில்லாத சிற்றின்பத்திற்காக விலைமாதர்களின்மீது அற்ப ஆசைகளைக் கொண்டு, பணத்தைச் செலவிட்டு, பற்பல நோய்களுக்கு ஆளாகி,

துன்புறுதல் தேவையா? என அடிகளார் வினவுகின்றார். இதனால், இறைவனது திருவடிகளுக்குச் செய்யப்படும் பூசைகளையும் மறக்க நேரிடும். எனவே, இனிமேலாவது இதனை உணர்ந்து நல்வழி ஒழுகுதல் நலமாகும் என அடிகள் அறிவுறுத்துகின்றார்.

தவிர, சிற்றின்பத்தின்மீது நாட்டம் கொண்டவர்கள் விண்ணுலகில் வாழ்வதற்கான வாய்ப்பினை இழந்து விடுவர் என்பதனை,

*மண்ணொடு மண்ணாகிவிடும்பொய்*

*பெண்ணுடலில் மோகமுற்றுக்*

*கண்ணிழந்த பாவியார்க்குமே ஒவ்வாதுயர்ந்த*

*விண்ணுலகில் வாழ்வதற்குமே.*

*(குருமதிமாலை: 46)*

எனும் செய்யுள் வரிகள் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன. இப்புண்ணிய பூமியில் பிறந்த பெண்மணிகளின் உடல் அமைப்பைக் கண்டு காமம் கொள்வதனால், கண்ணிருந்தும் குருடர்களாகவே வாழ்வார்கள் என்று சித்ரமுத்து அடிகள் குறிப்பிடுகின்றார். இவர்கள், மேலாம் பதவி எனும் முக்தியை அடைய தகுதியற்றவர்கள் என்பதை உணர்ந்து நிலையில்லாத சிற்றின்பத்தை அடியோடு விட வேண்டும் என அடிகள் அறைகூவல் விடுக்கின்றார்.

## முடிவுரை

சித்ரமுத்து அடிகளார் தமது வாழ்க்கையில் கண்டுணர்ந்த நிலையாமை சிந்தனைகளைச் செய்யுள் வழியாகத் திறம்பட விளக்கியுள்ளார். நிலையாமையைப் பற்றி மக்களும் அறிந்து அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் இந்தச் செய்யுள்கள் இயற்றப்பட்டுள்ளதை இதன்மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இங்குக் கூறப்பட்ட நிலையாமை தொடர்பான கருத்துகளின் அடிப்படையில், மனிதர்கள் இவ்வுலகில் வாழும்வரை தீயனவற்றை நீக்கி, நல்லனவற்றை மட்டுமே செயல்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. இந்த நிலையாமையை விலக்கி அறநெறிகளைப் பின்பற்றினால், முக்தி என்னும் பேரின்பம் கிட்டுவது உறுதி என்பதனை அடிகளாரின் செய்யுள்கள் வலியுறுத்துகின்றன. ஆகவே, இதனைக் கருத்தில் கொண்டு மானிடர்கள் தங்கள் வாழ்க்கையில் நிலையாமையை விடுத்து நிலையுள்ள இறைவன் திருவடியைப் பற்றி பேரின்பம் பெற வேண்டும் என்பதே கட்டுரையாளரின் எதிர்ப்பார்ப்பாகும்.

## References


Anbalagan, K. (2003). *Tirumantiram Uṇarttum Camutāya Camaya Vāḻviyal Neṟikaḷ*. (Unpublished doctoral dissertation). Tamil Nadu, India: Bharathiar University. Retrieved September 6, 2021, from http://hdl.handle.net/10603/102081.

Kalavathy, S. (2013). *Tirumūlariṉ Tirumantiram Maṟṟum Vētāttiriyiṉ Vētāttiriyam - Ōr Ōppīṭṭu Āyvu*. (Unpublished doctoral dissertation). Tamil Nadu, India: University of Madras. Retrieved September 6, 2021, from http://hdl.handle.net/10603/272820.

Krishnasamipillai, C. (1935). *Navīṉa Tamiḻ Akarāti*. Chennai: C. Kumaraswami Naidu Sons.

Mahalechumi, T. Dr. (2014). *Tirumantiram Kāṭṭum Vāḻviyal Neṟikaḷ*. Chennai: International Institute of Tamil Studies.

Narayanan, K. (1990). *Cittar Tattuvam*. Sithambaram: Sabanayagam Printers.

Ramanatha Pillai, P. & Sithambaranar, A. (1957). *Tirumantiram Mūvāyiram*. Madras: Saiva Cittanta Nootpathippu Kazhagam, Ltd.

Singaravelu Mudaliar, A. (2002). *Apitāṉa Cintāmaṇi*: *The Encyclopedia of Tamil Literature.* New Delhi: Asian Educational Services.

Thavayogi Thangarasan Adigal. (2012). *Ātma Viḷakkam*. Coimbatore: Sri Agathiar Gnana Peedam.

Vithuvan Balur Kannappa Mudaliar. (1957). *Tamiḻ Ilakkiya Akarāti*. Chennai: Central Press.

Yogi Kailashnath. (2015). *Cittar Kaḷañciyam*. Chennai: Karpagam Buthagalayam.